# தேசிய கல்வி நிறுவகம்
## இரண்டாம் மொழியாக தமிழ் /சிங்களம் கற்பித்தலில் டிப்ளோமா பாடநெறி
## Diploma in Teaching Sinhala / Tamil as a Secound Language
## (SLQF Level 3)

தேசிய கல்வி நிறுவகத்தின் ஆசிரியர் கல்வித்துறையினால் நடாத்தப்படும் மேற்படி கற்கை நெறிக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**விண்ணப்பிப்பதற்குரிய தகைமைகள்**

- பல்கலைக்கழங்கள்/ தேசிய கல்வியியல் கல்லூரிகள் / அரச அங்கீகாரம் பெற்ற தனியார் பாடசாலைகள்/ பிரிவேனாக்களில் ஆகியவற்றில் தற்போது இரண்டாம் மொழியாக தமிழ்/ சிங்கள மொழியினைக் கற்பிப்பவராக இருக்க வேண்டும்.

**பாடநெறியின் இயல்பு**

- பாடநெறியின் காலம் ஒரு வருடம்
- வார இறுதி நாட்களில் மற்றும் பாடசாலை விடுமுறை நாட்களில் நடாத்தப்படும் பகுதிநேர பாடநெறியாகும்.

**பாடநெறிக் கட்டணம்**

| | |
|---|---|
| விண்ணப்பிக்கும் கட்டணம் | ரூ 500/- |
| பதிவுக் கட்டணம் | ரூ 1,000/- |
| பாடநெறிக் கட்டணம் | ரூ. 30,000/- |

- பாடநெறிக் கட்டணம் இரண்டு தவணைகளில் செலுத்த முடியும். பாடநெறியின் பதிவுக் கட்டணமாக ருபா 1,000 ரூபா முதலாம் தவணைக் கட்டணத்துடன் இணைத்து செலுத்தப்பட வேண்டும்.
- பாடநெறியின் இறுதியில் நடத்தப்படும் பரீட்சைகளுக்காக பரீட்சைக் கட்டணம் விண்ணப்பதாரியால் செலுத்தப்பட வேண்டும்.

**பாடநெறிக்கும் தெரிவுசெய்யும் முறை**

அடிப்படைத் தகைமைகளைப் பூர்த்தி செய்த விண்ணப்பதாரிகள் நேர்முகப் பரீட்சையின் மூலமாக பாடநெறிக்கும் தெரிவு செய்யப்படுவர்.

**பாடநெறி நடாத்தப்படும் இடம்**

தேசிய கல்வி நிறுவகம், மகரகம

**விண்ணப்பிக்கும் முறை**

மாதிரி விண்ணப்பப்படிவத்தை தயாரித்து அதனுடன் விண்ணப்பக்கட்டணம் 500/=ஐ எந்தவொரு இலங்கை வங்கிக் கிளையிலும் 607628 எனும் பணிப்பாளர் நாயகத்தின் கணக்கிலக்கத்தில் பணத்தைச் செலுத்தி பெற்றுக் கொண்ட பற்றுச்சீட்டின் மூலப்பிரதியும் சுயவிலாசமிடப்பட்ட ரூபா 15/- முத்திரை ஒட்டப்பட்ட 9”x 4” அளவுடைய தபால் உறையினையும் இணைத்து 2019.02.22அன்று அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக **“பணிப்பாளர், ஆசிரியர் கல்வித்துறை, தேசிய கல்வி நிறுவகம், மகரகம”** என்ற விலாசத்திற்கு பதிவுத்தபாலில் அனுப்பி வைக்கவும். (காசுக்கட்டளைகள், அல்லது ஏனைய வங்கிகளில் செலுத்தப்பட்ட பற்றுச்சீட்டுகள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது) தபாலுறையின் இடதுபக்க மேல் மூலையில் Dip in TSTSL-2019 என்பதைக் குறிப்பிடுக.

www.nie.lk என்ற இணையத்தளத்தில் விண்ணப்பப்படிவத்தைப் பெற்றுக்கொள்ள முடியும்.

**கலாநிதி (திருமதி)T.A.R.J. குணசேகர**
பணிப்பாளர் நாயகம்,
தேசிய கல்வி நிறுவகம்,
மகரகம.